## கடந்த ஐந்து நாட்களில் ஒவ்வொரு நாளும் 10 மணி நேரம்

# 16,500 பேரிடம் நேர்காணல் நடத்திய கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் !

## பெண்கள் – இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 25-

**தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தலில் போட்டியிட தி.மு.க சார்பில் கேட்பு மனு அளித்தவர்களிடம் நேர் காணல் நிகழ்ச்சி நடத்தினார். பெண்களும் இளைஞர்களும் அதிக அளவில் பங்கேற்றனர். ஐந்து நாள்கள் நடைபெற்ற இந்த நேர்காணலில் தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 16,500 பேர் கேட்பு மனு அளித்திருந்தனர்!**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திராவிட நாயகர் அவர்கள் தமிழ்நாட்டில் படைத்து வரும் புதுமைகள் அனைத்தும் என்றும் வரலாற்றில் இடம் பெறக்கூடியவை. திராவிட மாடல் ஆட்சியையும், கட்சியையும் அவர் இயக்கி வரும் திறன்களைக் கண்டு தமிழ்நாடு மட்டும் அல்ல இந்தியாவின் பிற மாநிலங்களும் கண்டு வியக்கின்றன. பல வழிகளில் திராவிட நாயகர் அவர்களின் அறிவாற்றலை, செயல் திறன்களை, அணுகுமுறைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் தத்தம் மாநிலங்களில் கடைப் பிடிக்கிறார்கள்.

அந்த அளவுக்கு திராவிட நாயகரின் திறன்களும் அணுகுமுறைகளும் வித்தியாசமாகவும் விநோதமாகவும் அமைந்துள்ளன. நடைபெறவுள்ள சட்டமன்றத்தேர்தலில் போட்டியிட கேட்பு மனு அளித்தவர்களிடம் அவர் நடத்திய நேர்காணல் நிகழ்ச்சியும் அனைவர் கவனத்தையும் ஈர்த்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிட நாயகர் அவர்கள் அரசின் அதிகாரிகள் அலுவலர்கள் அனைவரையும் அரவணைப்பது போலவே, கட்சியின் நிர்வாகிகளையும், தொண்டர்களையும் கனிவுடனும் கண்டிப்புடனும் வழி நடத்திவருகிறார்கள். கட்சி நிர்வாகிகளிடமும் தொண்டர்களிடமும் அவர் கொண்டுள்ள நேசம் நிகரில்லாதது. தொண்டர்களிடம் அவர் காட்டும் கனிவு, தொண்டர்களுக்கு அவர் செலுத்தும் மரியாதை இவைகளெல்லாம் ஒவ்வொருவரையும் நினைந்து நினைந்து மகிழவைக்கின்றன.

தலைவரைக் காண வேண்டும் அவருடன் பேச வேண்டும் அவருடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதில் நிர்வாகிகளும் தொண்டர்களும் கொண்டுள்ள ஆர்வத்தை தி.மு.க.வை தவிர வேறு எந்த கட்சியிலும் காண முடியாது.

சில நாள்களில் தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு தேர்தல் வர இருக்கிறது. இந்தத் தேர்தலில் போட்டியிட விரும்பும் நிர்வாகிகள் தொண்டர்களுக்கு தலைமைக் கழகத்தில் நேரில் வந்து கேட்பு மனு அளித்திட வேண்டும் என தலைமைக் கழகம் மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

எந்த தொகுதியில் யார் போட்டியிடுவது என்பதை முடிவு செய்திட வேண்டும். இதற்காகப் போட்டியிட கேட்பு மனு அளித்தவர்களிடம் மாவட்ட வாரியாக சட்டப்பேரவை தொகுதி வாரியாக நேர்காணல் நடத்தி அவர்களில் தகுதியானவர்களைத் தேர்வு செய்திட வேண்டும். எனவே திராவிட நாயகர் அவர்கள் விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் தேதியை மாவட்டம் வாரியாக தொகுதி வாரியாக அறிவித்தார்கள். அந்த அறிவிப் பின்படி வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்பி கேட்பு மனு அளித்த கழகத் தோழர்கள்தங்களுக்கு உரிய நாளில், காலையிலோ மாலையிலோ உரிய நேரத்தில் அறிவாலயம் வந்து கூடினர்.

கழகத் தலைவர், திராவிட நாயகர் அவர்கள் மார்ச் 17 செவ்வாய் முதல் மார்ச் 23 திங்கள் வரை ஆறு நாள்கள் சென்னை அறிவாலயம் கலைஞர் அரங்கில் நேர்காணல் நடத்தினார்கள். நேர்காணலில் முதல் நாளான 17.3.2026 அன்று புதுச்சேரி மாநிலத்திற்கும், 18.3.2026 முதல் மற்ற நாட்களில் தமிழ்நாட்டிற்குமான கேட்பு மனு கொடுத்தவர்களிடம் நேர்காணல் நடைபெற்றது. நேர்காணல் நடைபெறும் நாளில்



காலை 9.00 மணிக்கே திராவிட நாயகர் அவர்கள் அறிவாலயம் வருகை தந்தார்கள். காலை 9.30 மணி தொடங்கி பகல் 2.00 மணி வரையிலும், பிற்பகலில் 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் என ஒவ்வொரு நாளும் ஏறத்தாழ 10 மணி நேரம் போட்டியிட கேட்பு மனு அளித்த ஒவ்வொருவரிடமும் நேர்காணலை நடத்தினார்கள்.

கழகத் தலைவர் திராவிட நாயகர் அவர்கள் போட்டியிட விரும்பி கேட்பு மனு அளித்தவர்களின் பட்டியல் இருந்தது. அந்தப் பட்டியல்படி பெயர்சொல்லி ஒவ்வொருவராக அழைத்தார்கள். அதன்படி நேர்காணலில் பங்கேற்றவர் வந்தவுடன் அவரை இருக்கையில் அமரச் செய்தார்கள். அவரிடம் உங்கள் பெயர் என்ன, உங்கள் ஊர் எது, உங்கள் தொகுதி எது, உங்கள் மாவட்டம் எது மாவட்டச் செயலாளர் யார் என்ற விவரங்களையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக கேட்டார்கள்.

அதன் பின்னர், திராவிட மாடல் அரசின் திட்டங்களைப் பற்றிக் கேட்டார்கள். இந்த திட்டங்கள் மீது உங்கள் பகுதி மக்கள் கொண்டுள்ள எண்ணம் உங்களுக்குத் தெரியுமா அதைப் பற்றிச் சொல்லுங்கள் என கேட்டு மக்களை எப்படி அணுகுவீர்கள், எப்படி மக்களிடம் வாக்குகள் கேட்பீர்கள், உங்களால் எத்தனை வாக்குகள் பெற முடியும், உங்கள் தொகுதியில் எதிர்க்கட்சி சார்பில் யார் நின்றாலும் தயக்கமின்றி, அஞ்சாமல் அவரை எதிர்த்து நின்று வெற்றிபெற என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள் என்பது போன்ற கேள்விகளைக் கேட்டு வேட்பாளர் ஆகும் தகுதியை ஆய்வு செய்தார்கள்.

அப்படி ஆய்வு செய்யும்போது அவர்கள் அனைவரும் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் எல்லாம் சிறப்பான முறையில் பயன் அளிக்கின்றன அவற்றின் மூலம் மக்கள் இந்த அரசின் மீது மிகுந்த மரியாதை கொண்டுள்ளார்கள் என்பது போன்ற செய்திகளை கூறினார்கள். அவற்றைக் கேட்ட கழகத் தலைவர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இப்படி, ஐந்து நாள்களிலும் தமிழ்நாட்டின் 234 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் புதுவை மாநிலத்தின் 30 தொகுதிகளுக்கும் போட்டியிட விரும்பி கேட்பு மனு அளித்திருந்த நிர்வாகிகளிடம் கேள்விகளைத் தொடுத்து தொகுதி நிலவரங்களை தெளிவாக அறிந்து கொண்டார்கள்.

நேர்காணலில், தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த 16,500 பேர் கேட்பு மனு அளித்துள்ளார்கள். மற்றவர்களுக்காக விண்ணப்பித்தவர்களிடமும் நேரடியாக பங்கேற்றவர்களிடமும் தொகுதி பற்றிய விவரங்களை கேட்டறிந்தார். இந்த நேர்காணலில் கேட்பு மனு அளித்தவர்களில் பெண்களும் இளைஞர்களும் அதிகமாக இருந்ததும், அவர்கள் ஆர்வத்துடன் நேர்காணலில் பங்கேற்றதும் எல்லோருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. நேர்காணல் நடைபெற்ற இந்த நாள்களில் அறிவாலயம் கழக நிர்வாகிகளாலும் தொண்டர்களாலும் நிரம்பி வழிந்தது. நேர்காணலில் பங்குபெற்ற ஒவ்வொருவரும் தலைவரைப் பற்றி நினைந்து தம்மைப் பற்றி தலைவர் அவர்கள் கேட்டு அறிந்தது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது; அத்துடன் எங்களைப் பற்றிய தகவல்களை முன்கூட்டியே தெரிந்து வைத்திருந்து எங்களைப் பற்றி அவர் கேட்டது மேலும் எங்களுக்குப் பெருமிதத்தைத் தந்தது என்று அவர்கள் மகிழ்ச்சியை அங்கு கூடி இருந்தவர்களிடம் எல்லாம் பகிர்ந்து கொண்டார்கள்.

இப்படி ஒரு தலைவர் தொண்டர்களைப் பற்றி முழுமையாக நேருக்கு நேர் சந்தித்து அறிந்து கொள்வதும். தலைவரின் சிறப்புகளை நேரில் கண்டு மகிழ்வதும் வேறு எந்த அரசியல் கட்சியிலும் காண்பது என்பது மிகவும் அரிதாகும்.

திராவிட நாயகர் அவர்களைப் பொருத்தவரையில் எந்த ஒரு பணியையும் சிறப்பாக செய்வது எல்லோரும் ஏற்கக் கூடிய வகையில் நேர்த்தியாகச் செய்து முடிப்பது என்பது அவரிடம் அமைந்துள்ள ஒரு பெருமைக்குரிய சிறந்த குணமாகும். இந்த நேர்காணல் பணியிலும் திராவிட நாயகர் அவர்களின் முத்திரை அனைவராலும் பாராட்டப்படுகிறது.

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கழக தலைவருடன் இந்த நேர்காணலில் உடனிருந்தனர். இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆஸ்டின், தாயகம் கவி, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சிமுருகன் ஆகியோர் நேர்காணலில் பங்கேற்றவர்களை நேர்த்தியாக வரிசையில் கலந்து கொள்ள உதவி செய்தார்கள்.

---

### 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற வி.சி.க. பாடுபடும்!

## தமிழ்நாட்டு மக்களின் பெரும் ஆதரவோடு தி.மு.க. கூட்டணி வெற்றிபெறும்!

### விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. பேட்டி!

சென்னை, மார்ச் 25-

200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற வி.சி.க. பாடுபடும் தமிழ்நாட்டு மக்களின் பெரும் ஆதரவோடு தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் என்று வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன் குறிப்பிட்டார்.



தி.மு.க. கூட்டணியில் 8 தொகுதிப் பங்கீடு உறுதி செய்யப்பட்ட பின்னர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது தொல் .திருமாவளவன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில், வி.சி.க. 6 இடங்களில் தனித்தொகுதியிலும், இரண்டு இடங்களில் பொதுத் தொகுதியிலும் போட்டியிடுகிறது.

கூட்டணியில் இரட்டை இலக்கத் தொகுதிகளை கேட்டுப் பெற வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் நேற்று முன்தினம் (மார்ச் 23) நடைபெற்ற உயர்நிலைக் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த எட்டு ஆண்டுகளாக ஒத்த கருத்தியலோடு செயல்படுகிற கூட்டணி எங்கள் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, அகில இந்திய மதவாத, சாதிவெறி சக்திகள், வலதுசாரி சக்திகள் வலுப்பெறுவதைத் தடுக்க வேண்டும். நாட்டையும் மக்களையும் மதவாத வெறுப்பு அரசியலில் இருந்து பாதுகாக்க வேண்டும் என செயல்படும் கூட்டணி எங்கள் கூட்டணி.

இந்தக் கூட்டணியின் வெற்றியை முன்னிறுத்தி, கூட்டணியில் உள்ள நல்லவை, கெட்டவைகளை சீர் தூக்கிப் பார்த்து விடுதலைச் சிறுத்தைகளின் நலன் எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு நாம் அங்கம் வகிக்கும் கூட்டணியின் நலனும் முக்கியம் என கருத்தில் கொண்டு இந்த முடிவுக்கு வி.சி.க. உடன்பட்டிருக்கிறது. தொடர்ந்து தி.மு.க.வுடன் பயணிப்பதற்கு, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் பயணிப்பதற்கு இடதுசாரி ஜனநாயக அரசியல் தமிழ் மண்ணில் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான்.

வலதுசாரி பிற்போக்கு அரசியல் வலுப்பெற்றுவிடக்கூடாது, காலூன்றி விடக்கூடாது, அது தமிழ்நாட்டுக்கும் இந்திய தேசத்துக்கு நல்லதல்ல என்பதற்காகத்தான் இந்தப் பேச்சு வார்த்தையை நடத்தி முடித்திருக்கிறோம்.

200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற விடுதலைச் சிறுத்தைகள் பாடுபடுவோம். தமிழ்நாட்டு மக்களின் பெரும் ஆதரவோடு இந்தக் கூட்டணி வெற்றி பெறும்.

ஒன்றிரண்டு தொகுதிகளுக்காக முரண்டுபட்டு கூட்டணிக்குள் சலசலப்பை உருவாக்கி, வெற்றிக்கான வாய்ப்பை சேதப்படுத்திவிடக் கூடாது என்ற பொறுப்புணர்வுடன் இந்த நிலைப்பாட்டை எடுத்திருக்கிறோம். இதில் எங்களுக்கு மனநிறைவு இருக்கிறது.

வி.சி.க., கம்யூனிஸ்ட், இஸ்லாமிய கட்சிகளுக்கு வழங்கப்பட்ட தொகுதிகள் எண்ணிக்கை குறைவாக இருக்க லாம். ஆனால், இடதுசாரி அரசியலை தி.மு.க. பாதுகாப்பதாகவே நான் கருதுகிறேன். வருகிற தேர்தலில் 8 தொகுதிகளிலும் பானை சின்னத்தில் தான் வி.சி.க.போட்டியிடும்”

இவ்வாறு தொல் திருமாவளவன் எம்.பி. பேட்டியளித்தார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு மேற்கு மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் செஞ்சியில் நடைபெற்ற தி.மு.க. கிளைக் கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். உடன் செஞ்சி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி மத்திய ஒன்றியச் செயலாளர் விஜயராகவன், மேற்கு ஒன்றியச் செயலாளர் பச்சையப்பன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், அனந்தபுரம் பேரூராட்சி மன்றத் தலைவர் முருகன், நகர செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

---

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட - மாவட்ட துணை - தொகுதி நிர்வாகிகள் நியமனம்!

### தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

DMK IT WING

**வேலூர் வடக்கு மாவட்டம்**

| | |
|---|---|
| மாவட்ட ஒருங்கிணைப்பாளர் | - திரு.முருகானந்தம் |
| மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் | - திரு. பி. செல்வகுமார் (கே.வி.குப்பம் - களப்பணி) |
| | திரு. கோகுல் அஷ்வின் (காட்பாடி - களப்பணி) |

**காட்பாடி சட்டமன்ற தொகுதி**

காட்பாடி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்:

| | |
|---|---|
| களப்பணி | - திரு. ஏ. முத்து |
| சமூகவலைத்தளம் | - திரு. எஸ். வினோத் |
| மகளிர் | - திருமதி. எச். ஞானாம்பாள் |


**கே.வி.குப்பம் சட்டமன்ற தொகுதி**

கே.வி.குப்பம் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்:

| | |
|---|---|
| களப்பணி | - திரு. ஆர். முரளி |
| சமூகவலைத்தளம் | - திரு. எஸ். பரந்தாமன் |
| மகளிர் | - திருமதி. வி. சத்யா |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23.03.2026

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்,
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி



தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத் தலைவரும், முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் முனைவர் எஸ். தமிழ்வாணன் 22.03.2026 அன்று இயற்கை எய்தியதை ஒட்டி, நேற்று முன்தினம்--------------------* (23.03.2026) தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத்தில் அவருக்கு புகழாஞ்சலி செலுத்தப்பட்டது. ஆணையத்தின் துணைத் தலைவர் எழுத்தாளர் இமையம், உறுப்பினர்கள் திருமதி.ஜெ.ரேகா பிரியதர்ஷினி, செ. செல்வகுமார், மூ.பொன் தோஸ், முனைவர் சு.ஆனந்தராஜா, பொ. இளஞ்செழியன் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.